DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII Code of Criminal Procedure)

---

IN THE COURT OF IV ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, MADURAI

**S.C. No.456/2016**

**P.W.16**

DEPOSITION OF WITNESS FOR PROSECUTION DEFENCE COURT

| | | |
|---|---|---|
| NAME | : | விஜயபத்மநாபன் |
| Father Name | : | சுந்தரமூர்த்தி |
| VILLAGE | : | |
| CALLING | : | |
| AGE | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 02.06.2025.

(2 எதிரி ஆஜர். 3 மற்றும் 7 எதிரிகள் ஆஜர்படுத்தப்பட்டார்கள். 1வது எதிரி ஆஜர் இல்லை, 1வது எதிரி தரப்பில் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. )

<u>அரசு தரப்பில் முதல் விசாரணை :</u>

நான் தற்போது பொய்கைகரைப்பட்டியில் குடியிருக்கிறேன். நான் ஆட்டோ ஓட்டி வந்தேன். தற்போது ஆட்டோ வேலை செய்து வரவில்லை. எனக்கு இந்த வழக்கு குறித்து எதுவும் தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**(சாட்சியை பிறழ்சாட்சியாக அறிவிக்க கோரி அரசு தரப்பு வழக்கறிஞர் வேண்டியதன் அடிப்படையில் சாட்சி பிறழ்சாட்சியாக பாவிக்கப்பட்டு அரசு தரப்பு வழக்கறிஞர் மேலும் விசாரிக்க அனுமதிக்கப்படுகிறார் )**

<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை :-</u>

நான் போலிசார் விசாரணையின் போது கடந்த 21.11.2015ம் தேதி இரவு 11 மணியளவில் நான் எனக்கு சொந்தமான TN 59 AV 3817 என்ற ஆட்டோவை சவாரி செய்துவிட்டு மூன்றுமாவடி வழியாக ஆட்டோ ஸ்டான்டிற்கு வந்துகொண்டிருந்த போது, அங்கு அந்த வழியாக வந்தவர்கள் வாகனங்களை திருப்பிக்கொண்டு சென்றனர் என்றும், என்ன என்று விசாரித்த போது, ஆண்டாள்புரத்தை சேர்ந்த ராமகிருஷ்ணன் என்பவரை சகாய பிரவீன் என்பவர் குத்தி காயப்படுத்திவிட்டு ஓடிவிட்டார் என்றும், நானும் பயந்துகொண்டு எனது

ஆட்டோவை திருப்பிக்கொண்டு மீண்டும் மூன்று மாவடி பக்கம் சென்றுவிட்டேன் என்று போலிசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது உண்மைக்கு மாறாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :-** இல்லை.

**மறு விசாரணை –** இல்லை.